

Madurai Symposium 2007

Advancing Development

Building Alliances

24-29 September



---

செய்தியறிக்கை

செப்டம்பர் 26, 2007

# அதிகாரப் பரவலாக்கம் உள்ளாட்சிகளில் அவசியம்

மதுரைக் கூடலரங்கம் 2007 நிகழ்வில் உள்ளாட்சித் தலைவர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஏறக்குறைய 200 பேர் இதில் பங்கேற்றனர். உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக முறை, அதிகாரப் பரவலாக்கம் உள்ளிட்ட பல்வேறு விசயங்கள் குறித்துப் பேசப்பட்டன.

முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய மத்திய உள்துறை அமைச்சகத்தின் அரசியல் பிரிவு முன்னாள் இயக்குநர் பி.எஸ்.இராகவன், 'மேற்குவங்கத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டிற்கும், தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டிற்கும் அடிப்படையில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. மேற்கு வங்க மாநிலத்தில் பஞ்சாயத்து அமைப்புகள் வலுவாய் இருக்கின்ற காரணத்தால் அங்குள்ள மாநில அரசு சிறப்புடனும், உறுதியுடனும் செயல்பட முடிகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்கள், ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், பொதுவிநியோகம் மற்றும் சில அடிப்படைச் சேவைகள் உள்ளாட்சி நிர்வாகத்திடமே இருப்பது சிறப்பிற்குரிய அம்சமாகும். மாவட்ட ஆட்சியர் பஞ்சாயத்துக்களின் ஆய்வாளர் என்ற முறையே மிகத் தவறான ஒன்றாகும். அது போல, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளை அதிகாரிகள் பதவி நீக்கம் செய்வதும், அவ்வமைப்புகளைக் கலைப்பதும் மிகத் தவறான முன்னுதாரணமாகும். அது தொடர்பான தமிழ்நாடு பஞ்சாயத்துக்களின் சட்டப்பிரிவு 205 உடனடியாக நீக்கப்படுதல் அவசியம். அதிகாரமும், பொறுப்பும் அதிகாரிகளுக்கும் மக்களின் பிரதிநிதிகளுக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும். அதே போல் பஞ்சாயத்து அமைப்புகளில் தலைவர் பொறுப்பில் உள்ளோர் அதிகாரம் இருந்தால்தான் செயல்பட வேண்டும் என்பதை மறந்து, இயல்பான தலைமைத்துவத்தின் வாயிலாக அதனைப் பெறுவதற்கு முயல வேண்டும். சிற்சில குறைகள் இருந்தபோதிலும் தமிழகத்தில் ஊராட்சிப் பெண் தலைவர்கள் தானாகச் செயல்படக்கூடிய நிலை தற்போது உருவாகி வருகிறது. மூன்றாவது அரசாகக் கருதப்படும் உள்ளாட்சி நிர்வாகங்களில் தற்போது இந்தியா முழுவதிலுமே அமைதிப்புரட்சி நடைபெற்று வருகிறது வரவேற்கத்தக்கதாகும்' என்றார்.

நிதித்துறையின் முன்னாள் செயலாளர் ஏ.எம்.சுவாமிநாதன் பேசுகையில், 'உள்ளாட்சி அமைப்புகளை நிர்வாகம் செய்யும் பொறுப்பிலுள்ள தலைவர்களெல்லாம் தங்கள் முன்னுள்ள பெரிய பிரச்சனைகளைக் கண்டு மலைக்காது, சிறிது சிறிதாய்ப் பகுத்துப் பார்த்து தீர்க்க முயலவேண்டும்' என்றார். செனகல் நாட்டின் முன்னாள் உள்ளாட்சித்துறை அமைச்சர் திருமதி சுகேன்யா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். பங்கு கொண்ட உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு பஞ்சாயத்து அமைப்புகளின் மக்களாட்சிப்பூர்வமான செயல்பாடுகள், அடித்தள அளவிலான அதிகாரப்பரவலாக்கம், உள்ளூரளவில் மேற்கொள்ள வேண்டிய வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்கள், நலிவுற்றோருக்கான தலைமைப்பயிற்சிகள், மக்களின் பங்கேற்பு என பல்வேறு விசயங்கள் குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்றன. இக்கருத்தரங்கினை தானம் அறக்கட்டளையின் திட்டத்தலைவர் சிங்கராயர், திட்டநிர்வாகி ஜானகிராமன் ஆகியோர் நெறிப்படுத்தினர்.

மேற்காணும் செய்தியை தங்கள் நாளேட்டில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

அன்புடன்

இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்